**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2025– ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை**

**IA 2/2021**

**in**

**OS no.127/2019**

**–––**

ராதா ......மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1. கண்ணப்பன் (எ) வீரணன் அம்பலம்
2. பால்
3. ஏஞ்சல்
4. ராணி
5. கேஸ்ட்ரோ
6. தேவி என்ற சகுந்தலா
7. ரமா
8. வளநாடு
9. மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா

(மேற்படி 9ம் எதிர்மனுதாரர்/உத்தேச 9ம் பிரதிவாதிக்கு ஷயாரின் தகப்பனாரும் இயற்கை காப்பாளருமான 8ம் எதிர்மனுதாரர்/உத்தேச 8ம் பிரதிவாதி மூலம்)

(Amended as per order in IA No.6/2024 dated on 25.06.2024)

.....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.10.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.என்.மகேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும் புரபோஸ்ட் 2, 6, 7ம் எதிர்மனுதாரர்கள்/எதிர்பார்க்கப்படும் 2, 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மோகனசுந்தரம், 2, 4ம் எதிர்மனுதாரர்கள்/2, 4ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசாக சேர்க்கப்பட்ட நபர்களில் ஒருவரான மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா என்பவருக்கு கார்டியனாக வளநாடு என்பவரை நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி சிபிசி ஆர்டர் 32 ரூல் 3 மற்றும் 4ன்படி கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.25 18:20:15 +0530

**1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா வழக்கு நிலுவையில் உள்ள பொழுது தனது தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர் கண்ணப்பன் (எ) வீரணன் அம்பலம் கடந்த 02.10.2019ம் தேதி இறந்துவிட்டதாகவும், இறந்த விபரத்தை உரிய காலத்திற்குள் சமூகம் நீதிமன்றத்தில் மெமோ மூலம் தெரிவித்துள்ளதாகவும், மெமோ திறந்த வெளி நீதிமன்றத்தில் ரெக்கார்டு செய்யாமல் தாவா வழக்கை சமரச தீர்வு மையத்திற்கு அனுப்பியதால் உரிய காலத்தில் ரெக்கார்டு செய்யப்படவில்லை என்றும், 20.01.2020ம் தேதி ரெக்கார்டு செய்யப்பட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்கக்கோரி தகுந்த மனுவும் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் மனுவும் தனித்தனியே சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் மகளான ராதிகா என்பவர் ஏற்கனவே இறந்துவிட்ட நிலையில், மேற்படியாரின் கணவரான வளநாடு என்பவரும், மைனர் மகளான வர்ஷிகா என்ற மஹிஷா என்பவரையும் வழக்கில் சேர்க்கக்கோரி ஏற்கனவே மனு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் வாரிசான ரமா என்பவரை மைனர் வர்ஷிகா என்கிற மஹிஷாவிற்கு கார்டியனாக நியமனம் செய்யக்கோரி சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் GWOP No.1/2018 என்ற மனுவை மேற்படி ரமா தாக்கல் செய்து மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டது என்றும், அந்த உத்தரவினை எதிர்த்து வளநாடு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA (MD) No.412/2021 தாக்கல் செய்து மேற்படி மனு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மேல்முறையீடு வழக்கில் இன்றைய தேதிவரை எந்த ஒரு முடிவான தீர்ப்பும் ஏற்படவில்லை என்றும், அதேபோல் சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் மைனர் வர்ஷா என்ற மஹிஷாவை தன்னிடம் ஒப்படைக்கக்கோரி வளநாடு GWOP No.7/2017 தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், அந்த உத்தரவினை எதிர்த்து வளநாடு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA (MD) No.411/2021ல் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மனுவும் இன்றைய தேதிவரை நிலுவையில் உள்ளது என்றும், எனவே தற்சமயம் வளநாடு என்பவரே சட்டப்படியான இயற்கை பாதுகாவலர் ஆகும் என்றும், எனவே தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசாக சேர்க்கப்பட்ட நபர்களில் ஒருவரான மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா என்பவருக்கு கார்டியனாக வளநாடு என்பவரை நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) 2, 4ம் எதிர்மனுதாரர்கள்/2, 4ம் பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:-**

மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக தாவா மனுவும் சட்டப்படி அனுமதிக்கக்கூடியதில்லை என்றும், தாவா மனுவும் சரியான முறையில் கட்டமைக்கப்படவில்லை என்றும், தாவா மனு அபிடவிட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா 1ம் எதிர்மனுதாரரான தன் தகப்பனார் கண்ணப்பன் அவர்களது மற்றொரு மகளான ராதிகா என்பவரின் மகள் ஆவார் என்றும், மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவும் தன் உடன்பிறந்த சகோதரி ராதிகாவின் மகள் ஆவார் என்றும், வளநாடு என்பவரும் கடந்த 04.09.2017ம் தேதி பஞ்சு என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டு வீட்டோடு மாப்பிளையாக வாழ்ந்து வருகிறதாகவும், அதனால் வளநாடு என்பவரால் குழந்தையை பராமரிக்க இயலாத நிலை ஏற்பட்டதால், குழந்தையின் எதிர்கால நலன் கருதி தன் தகப்பனார் மேற்படி

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.25 18:20:21 +0530

குழந்தையை ரமாவின் பராமரிப்பில் வளர்த்து வந்ததாகவும், இந்நிலையில் தன் சகோதரி ரமாவும் மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக இருந்து பராமரிப்பதற்காக சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக ரமாவை நியமனம் செய்யக்கோரி ரமா மனுதாக்கல் செய்து GWOP No.1/2018 ஆக 12.09.2019ம் தேதி அதுவும் அனுமதிக்கப்பட்டு உத்தரவாகியுள்ளது என்றும், மேற்படி உத்தரவும் இதுநாள் வரை மாற்றம் செய்யப்படவில்லை என்றும், மனுவில் மேல்முறையீடு மனுக்கள் நிலுவையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி மேல்முறையீடு மனுக்களிலும் நாளதுதேதிவரை எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், அதனால் GWOP No.1/2018 ஆக 12.09.2019ம் தேதி சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவே தற்போது வரை ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது என்றும், அவ்வாறுள்ள நிலையில் தாவா வழக்கில் மேற்படி நீதிமன்ற உத்தரவிற்கு விரோதமாக மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா என்பவருக்கு கார்டியனாக வளநாடு என்பவரை நியமிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா மனுவும் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், எனவே தாவா மனுவை தன் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) புரபோஸ்ட் 2 எதிர்மனுதாரர்/எதிர்பார்க்கப்படும் 7ம் பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:–</u>

மனுதாரர்/வாதி தன் வழக்கிற்கு தோதாகவும், பொய்யாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றும், தாவா மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 9வது புரபோஸ்ட் பிரதவாதியாக சேர்க்கக் சொல்லியுள்ள மைனர்.வர்ஷிகா (எ) மகிஷா என குறிப்பிட்டிருப்பதை வன்மையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மேற்படி மைனருக்கு வர்ஷிகா என்ற பெயர் கிடையாது என்றும், அவரின் உண்மையான பெயர் மகிஷா மட்டும் தான் என்றும், அவருடைய பிறப்பு சான்றிதழ், பள்ளி சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்களில் மகிஷா என்று குறிப்பிட்டிருப்பதும், அதை மறைத்து வர்ஷிகா என்ற பெயரையும் மனுதார் ஏதோ உள்நோக்கத்தோடு அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் என்றும், மேற்படி மைனர் மகிஷாவிற்கு தன்னை கார்டியனாக நியமிக்க தானும் மனு தாக்கல் செய்து சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் GWOP No.1/2018 12.09.2019ம் தேதியில் மேற்படி மைனர் மகிஷாவிற்கு கார்டியனாக தன்னை நியமிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதுபடி மேற்படி மைனர் மகிஷாவிற்கு தான் சட்டப்படி நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள கார்டியனாக இருப்பதை தெரிந்தும், மேற்படி மகிஷா மைனர் என்று தெரிந்தும் அவரை represent செய்வதற்கு கார்டியன் என்ற ஸ்தானத்தில் தன்னை குறிப்பிடாது என்றும், மைனர் பெயரை மட்டும் குறிப்பிட்டிருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 8வது புரபோஸ்ட் பிரதிவாதியான வளநாடு தாவா வழக்கிற்கு தேவையில்லாத கட்சிக்காரர் என்றும், அவர் தன் தகப்பனாரின் நேரடியான வாரிசு கிடையாது என்றும், எனவே இறந்த தன் தகப்பனாரான கண்ணப்பன் (எ) வீரணன் அம்பலத்திற்கு வளநாடு மருமகன் தவிர வாரிசாக இருக்க உரிமை கிடையாது என்றும், மேற்படி வளாநாடுவின் மனைவியான ராதிகா 11.04.2014ம் தேதியில் எழுதிவைத்த உயில் சாசனப்படி மேற்படி வளநாடு மைனர் மகிஷாவின் தந்தை கார்டியனாக இருக்கக்கூடாது என தெளிவாக குறிப்பிட்டு அந்த உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி ராதிகாவின் வாரிசாக மேற்படி வளநாடு இருக்க சட்டப்படி உரிமையில்லை என்றும், எனவே மனுவை தனது தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.25 18:20:26 +0530

செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

5. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6. மனுதாரர்/வாதி இந்த நிர் மனுவை இறந்துபோன தனது தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர் கண்ணப்பன் என்கிற வீரணன் அம்பலம் கடந்த 02.10.2019ம் தேதி இறந்துபோய்விட்டதாகவும், மேற்படி இறந்த விபரத்தை சமூக நீதிமன்றத்தில் மெமோ மூலம் தெரிவித்துள்ளதாகவும், அதன்பிறகு 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்கக்கோரி தகுந்த மனுவும் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் மனுவும் தனித்தனியே சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் மகளான ராதிகா என்பவர் ஏற்கனவே இறந்துவிட்ட நிலையில், மேற்படியாரின் கணவரான வளநாடு என்பவரையும் மைனர் மகளான வர்ஷிகா என்ற மஹிஷாவையும் வழக்கில் சேர்க்கக்கோரி ஏற்கனவே மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா என்பவருக்கு இயற்கை பாதுகாவலர் மேற்படியாரின் தகப்பனாரான வளநாடு ஆவார் என்றும், எனவே மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா என்பவருக்கு வளநாடு என்பவரை கார்டியனாக நியமனம் செய்யவேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1ம் எதிர்மனுதாரரின் மற்றொரு வாரிசான ரமா என்பவரை மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக நியமனம் செய்யக்கோரி சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் GWOP No.1/2018 என்ற மனுவை மேற்படி ரமா தாக்கல் செய்து, மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு அந்த உத்தரவை எதிர்த்து வளநாடு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA (MD) No.412/2021 தாக்கல் செய்து மேற்படி மனு நிலுவையில் இருந்து வருகிறதாகவும், அதேபோல் சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவை தன்னிடம் ஒப்படைக்கக்கோரி வளநாடு GWOP No.7/2017 தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்படி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் அந்த உத்தரவை எதிர்த்து வளநாடு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் CMA (MD) No.411/2011ல் மேல்முறையீடு தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் இருந்து வருகிறதாகவும், எனவே தற்சமயம் மேற்படி வர்ஷிகா என்ற மஹிஷாவிற்கு அவரது இயற்கை பாதுகாவலரும் அவரது தகப்பனாருமான வளநாடு சட்டப்படியான இயற்கை பாதுகாவலர் என்ற அடிப்படையில் கார்டியனாக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

7. மாறாக, 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனு சட்டப்படி அனுமதிக்கக்கூடியதல்ல என்றும், தாவா மனுவும் சரியான முறையில் கட்டமைக்கப்படவில்லை என்றும், தாவா மனு அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள மைனர் வர்ஷிகா என்ற மஹிஷா 1ம் எதிர்மனுதாரரான 4ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் கண்ணப்பன் அவர்களது மற்றொரு மகளான ராதிகா என்பவரின் மகள் ஆவார் என்றும், மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவும் 4ம் எதிர்மனுதாரரின் உடன்பிறந்த சகோதரியின் மகள் ஆவார் என்றும், மேற்படி ராதிகாவும் கடந்த 05.05.2014ம் தேதி இறந்துவிட்டதாகவும், ராதிகா இறந்தப்பிறகு மைனர் மகளை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.25 18:20:32 +0530

அவரது தகப்பனார் வளநாடு பராமரிக்கவில்லை என்றும், மேலும் மேற்படி வளநாடு என்பவரும் கடந்த 04.09.2017ம் தேதி பஞ்சு என்பவரை 2வது திருமணம் செய்து கொண்டு வீட்டுடன் மாப்பிளையாக வாழ்ந்து வருகிறதாகவும், அதனால் வளநாடு என்பவரால் குழந்தை பராமரிக்க முடியாது என்றும், குழந்தையின் எதிர்கால நலன் கருதி 1ம் எதிர்மனுதாரர் மேற்படி குழந்தையை ரமாவின் பராமரிப்பில் வளர்த்து வந்தார் என்றும், இந்நிலையில் மேற்படி ரமாவும் மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக இருந்து பராமரிப்பதற்காக சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக ரமாவை நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து GWOP No.1/2018 ஆக மனு செய்து அதுவும் கடந்த 12.09.2019ம் தேதி அனுமதிக்கப்பட்டு உத்தரவாகியுள்ளது என்றும், அதன்படி மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவிற்கு ரமாவே கார்டியனாக இருந்து பராமரித்து வருவதாகவும், மேற்படி உத்தரவும் இதுநாள் வரையில் மாற்றப்படவில்லை என்றும், அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவிலும் இதுநாள் வரையில் யாதொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், அதனால் கடந்த 12.09.2019ம் தேதி சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவே தற்போது வரை ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது என்றும், அவ்வாறு உள்ள நிலையில், தாவா வழக்கில் மேற்படி நீதிமன்ற உத்தரவிற்கு விரோதமாக மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக வளநாடு என்பவரை நியமிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா மனுவும் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமாய் வாதிடப்பட்டது.

8. இவ்வழக்கில் மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு கார்டியனாக சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் உத்தரவு பெற்ற ரமாவும் இவ்வழக்கில் இறந்தபோன 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் வாரிசு என்ற அடிப்படையில் தரப்பினராக அவரையும் சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவரது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர்/வாதி தன் வழக்கிற்கு தோதாகவும் பொய்யாகவும், மனு அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதாகவும், தாவா மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 9வது புரபோஸ்ட் பிரதிவாதியாக சேர்க்க சொல்லியுள்ள மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவுக்கு குறிப்பிட்டு இருப்பதை வன்மையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மேற்படி மைனருக்கு வர்ஷிகா என்ற பெயர் கிடையாது என்றும், அவர் உண்மையான பெயர் மஹிஷா மட்டும் தான் என்றும், அவரது பிறப்பு சான்றிதழ், பள்ளி சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்களில் மஹிஷா என்று குறிப்பிட்டிருந்தும் அதை மறைத்து வர்ஷிகா என்ற பெயரை மனுதாரர் ஏதோ உள்நோக்கத்தோடு குறிப்பிட்டிருக்கிறார் என்றும், மேற்படி மைனர் மஹிஷாவிற்கு தன்னை கார்டியனாக நியமிக்க இந்த எதிர்மனுதாரரும் மனு தாக்கல் செய்து சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் GWOP No.1/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.09.2019ம் தேதியில் மேற்படி மைனர் மஹிஷாவிற்கு கார்டியனாக புரபோஸ்ட் எதிர்மனுதாரராக உள்ள ரமாவை கார்டியனாக உத்தரவிட்டுள்ளதாகவும், அது படி மேற்படி மஹிஷாவிற்கு இந்த எதிர்மனுதாரர் சட்டப்படியான கார்டியனாக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள விபரம் தெரிந்தும் அவரை represent செய்வதற்கு கார்டியன் என்ற ஸ்தானத்தில் இந்த எதிர்மனுதாரரை குறிப்பிடாதது மைனர் பெயரை மட்டும் குறிப்பிட்டிருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 8வது புரபோஸ்ட் பிரதிவாதியான வளநாடு தாவா வழக்கிற்கு தேவையற்ற கட்சிக்காரர் ஆவார் என்றும், அவர் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரர் கண்ணப்பன் என்கிற வீரணன் அம்பலத்திற்கு

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.25 18:20:38 +0530

நேரடி வாரிசாக வரமாட்டார் என்றும், மேலும், மேற்படி வளநாடுவின் மனைவியான ராதிகா 11.04.2014ம் தேதி எழுதிவைத்த உயில் சாசனப்படி மேற்படி வளநாடு மைனர் மஹிஷாவின் தந்தை கார்டியனாக இருக்கக்கூடாது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், எனவே மேற்படி ராதிகாவின் வாரிசாக மேற்படி வளநாடு இருக்க சட்டப்படி உரிமையில்லை என்றும், இந்த விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு தெரிந்திருந்தும் ஏதோ உள்நோக்கத்தோடு மனுதாரர்/வாதியும் மேற்படி வளநாடை வாரிசாக சேர்க்க சொல்லியிருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா மனுவும் gross abuse of process of court ஆக உள்ளது என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டி வாதிடப்பட்டது.

9. 7ம் பிரதிவாதியாக சேர்க்கவேண்டிய ரமா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதுரையில், இறந்துபோன தனது தகப்பனார் கண்ணப்பன் என்கிற வீரணன் அம்பலத்திற்கு வாரிசு சேர்க்கவேண்டுமாய் மனு கொடுத்து, அதில் இறந்துபோன தனது சகோதரி ராதிகா என்பவரின் கணவரான வளநாடு மற்றும் அவரது மகளான வர்ஷிகா என்ற மஹிஷா என்பவர்களையும், வாரிசாக சேர்க்கவேண்டுமாய் மனு கொடுத்துள்ளதில், வளநாடு இறந்துபோன கண்ணப்பன் என்கிற வீரணன் அம்பலத்திற்கு வாரிசாக மாட்டார் என்றும், மைனர் வர்ஷிகா என்கிற மஹிஷாவின் சான்றிதழ்களில் மஹிஷா என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வர்ஷிகா என்பதை சேர்த்து மனுதாரர் இந்த நிர் மனுவில் சொல்லியுள்ளதாகவும், மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவிற்கு அவரது சித்தியான இந்த நம்பர் 7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதியாக சேர்க்கவேண்டிய நபரான ரமா என்பவரை மாண்பமை சிவகங்கை குடும்ப நல நீதிமன்ற GWOP No.1/2018 என்ற மனுவில் கடந்த 12.09.2019ம் தேதியில் கார்டியனாக நியமித்தும், மேற்படி இளவரின் தகப்பனார் தாக்கல் செய்த GWOP No.7/2017 மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டதன் அடிப்படையில், மேற்படி மைனரின் தகப்பனாரான வளநாடு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமும் கடந்த 08.04.2025ம் தேதியில் மாண்பமை சிவகங்கை குடும்ப நல நீதிமன்ற GWOP No.1/2018ல் ஏற்பட்ட உத்தரவை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளதாக 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் CMA (MD) No.411 மற்றும் 412 of 2021 and CMP (MD) No.3632 of 2021, 9630 of 2023, 299 and 302 of 2025 and 755 of 2025 என்ற மனுவில் கடந்த 08.04.2025ல் ஏற்பட்ட உத்தரவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது

"9. The trial Court, while considering the best interest of the child had observed that the appellant being a tailor has no wherewithal to bring up the child before with the financial status of the respondent and her father. No doubt the custody cannot be decided based on the financial strength or weakness. It is the amount of love and affection shown to the child and the best interest of the child to have a bright future and comfort living to be taken into account. In this case, we are dealing with the teenage girl is world's vice with a good education. On interacting with her clearly reveals that disturbing the custody and guardianship at this juncture will be detrimental to the best interest of the child comparing the appellant father, who is now married and having 2 children living with his 2nd wife happily and the respondent, who was almost dedicated her life for the welfare of the minor child. Undoubtedly the respondent Rama will be the best person to

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.25 18:20:44 +0530

be the custody and guardianship of the minor child.
என்று தனது உத்தரவில் தெரிவித்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

மேற்படி உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவிற்கு அவரது தகப்பனாரான வளநாடு என்பவரை கார்டியனாக சேர்க்கக்கோரிய மனு மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக அமைந்துள்ளதாலும், மேற்படி மைனர் வர்ஷிகா என்ற மஹிஷாவிற்கு அவரது சித்தியான ரமா என்பவரை வாரிசாக கேட்டு மனு தாக்கல் செய்ய அறிவுறுத்தி மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் வருடம் அக்டோபர் மாதம் 25–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.25 18:20:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.25 18:20:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்